## நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

## சி.சி. 24/2017

2023ம் ஆண்டு மார்ச் மாதம் 03ம் நாள் வெள்ளிக்கிழமை புகார்தாரர் தரப்பு சாட்சியாகிய பு.த.சா. 3 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.பூபதி உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேடி | வயது | 70 |
| த.பெ.(அ)க.பெ. | துரைசாமி | தொழில் | விவசாயம் |
| ஊர்/பணிபுரியுமிடம் | தாதகுள்ளனூர் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை :

நான் தாதகுள்ளனூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு என்மகன் சேகரை நான் எங்கள் நிலத்தில் ஏர் ஓட்ட சொன்னேன். அப்போது என் மகள் விஜயா வந்து ஏர் ஓட்டுவதை தடுத்தார். விஜயாவை மாடு முட்டி கீழே தள்ளிவிட்டது. அப்போது விஜயா என் மகன் மீது அப்படி இப்படி என்று சொல்லி என் மகன் மீது பொய் கேஸ் போட்டுவிட்டார். என் மகன் சேகர் ஜெயிலுக்கு போய்விட்டார். அப்போது சேகருடன் ஆடுமேய்த்து கொண்டிருந்த சுந்தரத்திடம் மேற்படி சேகர் மேயத்து கொண்டிருந்த ஆட்டை பார்த்து கொள்ளும்படி சொன்னேன். அப்போது மேற்படி ஆடுகளை 13 பெண் ஆடுகள் மற்றும் 1 கெடா மற்றும் 21 ஆட்டுகுட்டிகள் ஆகியவற்றை என் மகள் விஜயாவும் அவருடைய கணவர் ராஜாவும் ஓட்டி சென்றுவிட்டார்கள். பின்னர் சேகர் ஜாமீனில் வந்து எதிரிகள் மீது வழக்கு போட்டு போலீஸார் அதனை எடுக்காததால் இந்த வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.